பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**25 04 2026 6 45**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உள்நாட்டு சந்தை மற்றும் நுகர்வு காரணமாக, நாட்டின் பொருளாதார நிலை வலுவாக உள்ளது என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

2. நாட்டில் போதிய அளவு உரங்கள் கையிருப்பில் உள்ளதாக மத்திய ரசாயனங்கள் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

3. குறைந்தபட்ச ஆதரவு விலையில் நடப்பாண்டுக்கான கோதுமை கொள்முதலை அதிகரிக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

4. தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கிடையேயான நான்காவது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் மிகப்பெரிய உள்நாட்டு சந்தை மற்றும் நுகர்வு காரணமாக, இந்தியாவின் பொருளாதார நிலை வலுவாக உள்ளது என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புனேயில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், சர்வதேச அளவிலான விலைவாசி மற்றும் பதற்றமான சூழல் போன்ற சவால்களுக்கு இடையே ஏற்றுமதியாளர்கள் புதிய சந்தை வாய்ப்புகளை பயன்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

நாட்டின் சீரான பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்கு விவசாயம், உற்பத்தி, சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறையின் செயல்பாடுகளுக்கு தேவையான உதவிகளை வழங்குவதில் வங்கிகள் முக்கியப் பங்காற்றி வருவதாக அவர் கூறினார்.

கரும்பு உற்பத்தி, புத்தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட துறைகளுக்கும் வங்கிகள் கடனுதவி அளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

உள்நாட்டு தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலம் உண்மையான பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்ய முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதில் வங்கிகளின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து ஆய்வு செய்ய குழு ஒன்று அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

டிஜிட்டல் அடிப்படையிலான வங்கி பரிவர்த்தனைகள் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி கண்டுள்ளபோதிலும் வாடிக்கையாளர்கள் இடையேயான தொடர்புகளை மேம்படுத்திக்கொள்வதும் அவசியமானது என்று திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் போதிய அளவு உரங்கள் கையிருப்பில் உள்ளதாக மத்திய ரசாயனங்கள் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், விவசாயிகளுக்கு உரங்கள் தடையின்றி கிடைப்பது உறுதி செய்யப்படும் என்று கூறியுள்ளார்.

உரங்கள் கையிருப்பு குறித்து காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே தெரிவித்துள்ள கருத்துகளை அவர் நிராகரித்துள்ளார்.

விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் இடையே பதற்றத்தை உருவாக்கும் வகையில் அரசியல் ஆதாயத்திற்காக காங்கிரஸ் இதுபோன்ற செய்திகளை பரப்பி வருவதாக திரு. ஜெ.பி. நட்டா குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

உள்நாட்டு அஞ்சல் சேவைகளை மேம்படுத்தும் வகையில் நவீன தொழில்நுட்பப் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய தொலைத்தொடர்புத் துறை இணையமைச்சர் திரு பெம்மசானி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மின்னணு வர்த்தகம் சார்ந்த நடவடிக்கைகளை

அதிகரிப்பதற்கும், உள்நாட்டு பார்சல் சேவைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அஞ்சலக செயல்பாடுகளுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

வாடிக்கையாளரை மையமாகக் கொண்டு உலகத் தரத்திலான சேவைகளை வழங்குவதன் மூலம் நாட்டின் டிஜிட்டல் பொருளாதார வலிமையை மேம்படுத்த முடியும் என்று திரு. பெம்மசானி சந்திரசேகர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

குறைந்தபட்ச ஆதரவு விலையில் நடப்பாண்டுக்கான கோதுமை கொள்முதலை அதிகரிக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய உணவுத்துறை செயலர் திரு. சஞ்சீவ் சோப்ரா, கோதுமை கொள்முதலை 34 புள்ளி 5 மில்லியன் டன்களாக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு கோதுமை கொள்முதலுக்கான மாநில வாரியான இலக்குகளும் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு பருவம் தவறி பெய்த மழை காரணமாக கோதுமை உற்பத்தி சற்று குறைந்துள்ளதாக திரு. சஞ்சீவ் சோப்ரா கூறினார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகம் அருகே சிங்காரா பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயால், அப்பகுதியில் வசிக்கும் மக்கள் மற்றும் வன விலங்குகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

காட்டுத் தீயை அணைப்பதற்கான நடவடிக்கைகளில் தீயணைப்பு மற்றும் வனத்துறையினர் ஈடுபட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Saravanan — 45 Sec)**

<<<<>>>>

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் நிலவும் வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை காரணமாக, மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில்

அடுத்த **5** நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உள் தமிழக மாவட்டங்களின் ஒருசில இடங்களில் அடுத்த **3** நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட **2** முதல் **3** செல்சியஸ் அதிகரிக்க கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில், அதிகபட்ச வெப்பநிலை **37** டிகிரி செல்சியசாக இருக்கும் என்றும், வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ஈரானில் இருந்து கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் சீனாவை சேர்ந்த **40** கப்பல் நிறுவனங்களுக்கு அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

-------------

அமெரிக்கா-ஈரான் இடையேயான போர்நிறுத்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. அப்பாஸ் அராக்சி இஸ்லாமாபாத் சென்றுள்ளார்.

-------------

ஐரோப்பிய யூனியன் நாடுகளிடையே பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான புதிய வழிகாட்டுதல் நெறிமுறைகள் வகுக்கப்பட்டு வருவதாக ஐரோப்பிய ஆணையம் தெரிவித்துள்ளது.

-------------

கேதார்நாத் கோவில் நடை திறக்கப்பட்டு முதல் 3 நாளில் 90 ஆயிரத்துக்கும் அதிகமான யாத்ரீகர்கள் தரிசனம் செய்துள்ளனர்.

-------------

உத்தராகண்ட் மாநிலத்தில் முதற்கட்ட மக்கள் தொகைக் கணக்கெடுக்கும் பணியில், 62 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தங்களது சுய விவரங்கள் அடங்கிய படிவங்களை டிஜிட்டல் முறையில் தாக்கல் செய்துள்ளனர்.

-------------

இந்திய பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையல் கலைநயத்துடன் உற்பத்தி செய்யப்பட்டுள்ள ஆடைகளின் கண்காட்சி புதுதில்லியில் நேற்று தொடங்கியது.

-------------

வாக்கு எண்ணிக்கை மையங்களில் வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை

கண்காணிக்க, வேட்பாளர்கள் தங்களது பிரதிநிதிகளை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

-------------

தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் பத்திரத்தின் நிலுவைத் தொகையை வட்டியுடன் இன்று திருப்பிச் செலுத்தப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-------------

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் உள்ள புனித சூசையப்பர் ஆலய திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று தொடங்கியது.

-------------

***விளையாட்டுச் செய்திகள்***

இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கிடையேயான நான்காவது மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ஜோகன்னஸ்பர்கில் இப்போட்டி இன்றிரவு **9.30** மணிக்குத் தொடங்குகிறது.

--------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில், பெங்களூரு அணி **5** விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

பெங்களூருவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் பேட் செய்த குஜராத் அணி, நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **3** விக்கெட் இழப்பிற்கு **205** ரன் எடுத்தது.

இதனையடுத்து, **206** றன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பெங்களூரு அணி, **18.5** ஓவரில் **5** விக்கெட் இழப்பிற்கு **206** ரன் எடுத்தது.

இன்று நடைபெறும் போட்டியில், தில்லி அணி, பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் இப்போட்டி பிற்பகல் **3.30** மணிக்குத் தொடங்குகிறது.

மற்றொரு போட்டியில், ராஜஸ்தான் அணி, ஐதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

ஜெய்ப்பூரில் நடைபெறும் இப்போட்டி, இன்றிரவு **7.30** மணிக்குத் தொடங்குகிறது.

**<<<<The End>>>>**